**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/18** P.W. 1

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி. ஜெயந்தி | Father's / Husband Name பாஸ்கர் | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :19.10.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.10.2019.

**முதல் விசாரணை**.

நான் தூத்துக்குடி மாவட்டத்தில் கதவு. எண். 359/74, 2வது தெரு, மினி சகாயபுரம், லைன்ஸ் டவுன், தூத்துக்குடி என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் ஆவேன். எனது மகள் பெயர் சுகன்யா ஆகும். சுகன்யாவின் கணவர் பெயர் ஜெரோம் ஆகும். சம்பவம் நடைபெற்ற சமயம் 9 மாத குழந்தை ஆகும். எதிரிகள் இருவரையும் குழந்தையை எதிரியிடமிருந்து மீட்டப்பொழுது எதிரிகளை பார்த்துள்ளேன். எனது மகளுக்கும் அவரது தந்தையான பாஸ்கருக்கும் மன வருத்தம் ஏற்பட்டதால் என் மகள் குழந்தையை தூக்கிகொண்டு 31.01.2016ம் தேதி தனது குழந்தையை தூக்கிகொண்டு வேளாங்கண்ணிக்கு சென்றுள்ளார். அதற்கு முன்பாக என் மகள் வேளாங்கண்ணியில் உள்ள ஷீலா என்பவரின் பேன்ஸ் ஸ்டோரில் 2015 டிசம்பரில் வேலைப்பார்த்தார். இடையில் 10 நாள் கழித்து 10 நாள் கழித்து எனது மகள் தனது குழந்தையை பார்ப்பதற்காக தூதத்துக்குடியில் உள்ள எனது வீட்டிற்கு வந்து குழந்தையை பார்த்துவிட்டு செல்வார். அப்படி ஒரு முறை எனது மகள் தூத்துக்குடி வந்தபொழுதுதான் மேற்கண்ட சம்பவம் நடந்தது. எனது கணவர் திட்டியதால் எனது மகள் தனது குழந்தையை 31.01.2016 அன்று தூக்கிகொண்டு வேளாங்கண்ணிக்கு போய்விட்டது. எனது மகள் வேளாங்கண்ணி வந்தது 31.01.2016 ஆகும். வேளாங்கண்ணியில் ரூம் எடுத்து தங்க வசதி இல்லாதவர்கள் ஆயிரம் கால் மண்டபத்தில் தங்குவார்கள். அதுபோல எனது மகளும் தனது குழந்தையை வைத்துக்கொண்டு ஆயிரம்கால் மண்டபத்தில் தங்கியுள்ளார். ஆஜர் எதிரிகளுக்கும் எனது மகளுக்கும் எப்படி பழக்கம் என்று எனக்குத் தெரியாது. எதிரிகளிடம் 01.02.2016 அன்று எனது மகள் சுகன்யா எதிரிகளிடம் குழந்தையை கொடுத்துவிட்டு பாத்ரூம் சென்றுள்ளார். பாத்ரூம் சென்றுவிட்டு எனது மகள் வெளியே வந்து பார்க்கும்போது தனது மகளை கொடுத்துவிட்டு சென்ற எதிரிகளையும் காணவில்லை. தனது கை குழந்தையையும் எதிரிகளோடு காணவில்லை. எனது மகள் 2 மணி நேரம் பஸ் ஸ்டாண்டிற்கும் பாத்ரூமிற்கும் இடையே நடந்து எதிரிகளையும் தனது குழந்தையையும் தேடிப்பார்த்தும் காணவில்லை. அதன் பின்னர் என் மகள் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் தன் மகளை காணவில்லை என்று என் மகள் சுகன்யா புகார் கொடுத்துள்ளார். அது சம்மந்தமாக எனது மகள் கொடுத்த புகாரின் பேரின் வழக்கு பதிவு செய்யவில்லை. அதன் பிறகு எனது மகள் தூத்துக்குடிக்கு வந்துவிட்டார். எனது மகள் குழந்தையில்லாமல் வந்ததைப்பார்த்து

**C.C.01/18** P.W. 1

குழந்தை எங்கே என்று நான் எனது மகளிடம் கேட்டதற்கு அப்பொழுது இரண்டு நபர்களிடம் தான் பாத்ரூம் செல்வதற்காக குழந்தையை கொடுத்துவிட்டு பாத்ரூம் சென்றேன் என்றும் அதன் பின்னர் திரும்ப பாத்ரூம் போய்விட்டு வந்து பார்த்தபோது அந்த இரண்டு நபர்கள் குழந்தையை கொண்டு சென்றுவிட்டார்கள் என்று என் மகள் என்னிடம் சொன்னார். அவர் இது வகைக்கு வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறினார். ஆனால் FIR போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. அதன் பின்னர் நானும் எனது மகளும் எனது பேத்தியின் நான்கு ஐந்து புகைப்படங்களை எடுத்துக்கொண்டு வேளாங்கண்ணிக்கு வந்தோம். வேளாங்கண்ணியில் எனது மகள் தனது குழந்தையை எதிரிகளிடம் கொடுத்துவிட்டு சென்ற பாத்ரூம் சென்று அங்கிருந்த பாத்ரூம் வாட்ச்மேன் வயதான ஒரு நபர் அங்கிருந்தவரிடம் நானும் எனது மகளும் எனது பேத்தியின் போட்டோவை காண்பித்து நடந்ததை சொல்லி விசாரித்தோம். அந்த வாட்ச்மேன் என்னிடமும் எனது மகளிடமும் எதிரிகள் குழந்தையை வைத்திருந்ததாகவும் அவர்கள் நேற்றே வேளாங்கண்ணியில் இருந்து போய்விட்டார்கள் என்றும் அந்த குழந்தை யார் குழந்தை என்று தனக்குத் தெரியாது என்றும் எங்களிடம் சொன்னார். அவரிடம் எனது பேத்தியின் போட்டோ ஒன்றையும் எனது போன் நம்பரையும் கொடுத்துவிட்டு எப்பொழுது எதிரிகள் வந்தாலும் உடனே எங்களுக்கு போன் பண்ணுமாறு சொன்னோம். மற்றும் ஒரு வடநாட்டு இந்திகார பெண் ஒருவர் அங்கு அருகில் இருந்தவரிடம் எனது பேத்தியின் போட்டோவை காண்பித்து பார்த்தீர்களா என்று கேட்டோம். அந்த தமிழ் தெரிந்த இந்திகார பெண் எங்களிடம் அந்த குழந்தையை தான் பார்த்தாகவும் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் அந்த குழந்தையை நாகூர் தர்காவில் வைத்துக்கொண்டிருந்ததாகவும் நாகூர் தர்காவில் வைத்து அவர்களை தான் பார்த்ததாகவும் எங்களிடம் சொன்னார். நாங்கள் நாகூருக்கு சென்றோம். அங்கு நாகூரில் தர்கா அருகே எதிரிகளையும் எனது குழந்தையையும் நானும் எனது மகளும் தேடினோம். 2வது மாதம் 3 அல்லது 4ந்தேதி வேளாங்கண்ணி வந்து எனது பேத்தியை தேடினோம். அந்த இந்திகார பெண் சொன்ன உடனே மதியம் 3 மணிக்கு நானும் எனது மகள் சுகன்யாவும் நாகூர் தர்காவிற்கு சென்றோம். அங்கு எதிரிகள் குருப்பில் இருந்த வேறு ரெண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் ஒரு 35 வயது பெண்ணும் மற்றும் 10 வயது பெண் குழந்தை ஆகும். அந்த 35 வயது பெண்ணின் குழந்தை தான் 10 வயது பெண் குழந்தை ஆகும். அவர்களிடம் எனது பேத்தியின் போட்டோவைக் காட்டி விசாரித்தபொழுது குழந்தையை தங்களுக்குத் தெரியும் என்றும் எதிரிகள் கோயம்புத்தூருக்கு குழந்தையை கொண்டு சென்றுவிட்டதாகவும் எதிரிகளின் லக்கேஸ் ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் லாக்கரில் இருப்பதாகவும் ஈரோடு சென்றால் எதிரிகளை கண்டுபிடித்துவிடலாம் என்றும் அந்த இருவரும் எங்களிடம் சொன்னார்கள். உடனே அந்த இருவரையும் அழைத்துக்கொண்டு வேளாங்கண்ணி காவல் நிலையம் வந்து விபரம் சொன்னோம். போலிசார் அந்த இரண்டு நபர்களிடமும் 10

நாள் வோளங்கண்ணி காவல் நிலையம் வந்து கையெழுத்துப்போடவேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். நாங்களும் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்தோம். வெளியே வந்த பிறகு அந்த 10 வயது குழந்தைக்கு நாங்கள் பிஸ்கெட் மற்றும் கூல்ரிங்ஸ் வாங்கி கொடுத்தோம். அந்த குழந்தை எங்களிடம் எதிரிகளின் லக்கேஸ் ஈரோடு இரயில்வே ஸ்டேஷனில் லாக்கரில் உள்ளது என்றும் அங்கு சென்றால் எதிரிகள் வரும்போது பிடித்துவிடலாம் என்றும் சொன்னது. எங்களுக்கு காசு தட்டுப்பாடாக இருந்ததால் நேராக கிளம்பி தூத்துக்குடி வந்தோம். அடுத்த நாள் காலையில் பணத்தை தோதுபண்ணிக்கொண்டு நாங்கள் ஈரோடு இரயில்வே ஸ்டேஷனுக்கு சென்றோம். அங்கு இரயில்வே அதிகாரியிடம் எனது பேத்தியின் புகைப்படத்தை காட்டி எதிரிகளின் லக்கேஜ் குறித்து விசாரித்தோம். இரயில்வே ஸ்டேஷன் அதிகாரி நான் அழுததைப்பார்த்து இறக்கப்பட்டு லாக்கர் சாவியை எடுத்துவந்து லாக்கரை திறந்து காண்பித்தார். அதில் என் பேத்தியின் முன்பு போட்டிருந்த சட்டை, பால் பவுடர் மாவு டப்பா, 1வது எதிரி லெட்சுமியின் போட்டோ, லெட்சுமியின் ரேஷன்கார்டு, மற்றும் எதிரிகளின் துணிமணிகள் இருந்தது. அதில் லெட்சுமியின் ரேஷ்கார்டில் அவரது சொந்த ஊர் மதுரை என்றும் சாமிநாத தெரு என்றும் பரவை ஊர் என்றும் அவரது முதல் கணவர் பெயரும் மற்றும் லெட்சுமியின் இரண்டு குழந்தைகள் குறித்தும் லெட்சுமியின் சகோதரி ராக்கு என்பவரின் பெயரும் அந்த ரேஷன் கார்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்த இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரிடம் அந்த ரேஷன்கார்டை மட்டும் தாருங்கள் அதில் கண்டுள்ள லெட்சுமியின் முகவரியைப்பார்த்து எனது பேத்தியை மீட்டுவிடலாம் என்று சொல்லி அவர் அனுமதிக்க அந்த ரேஷன் கார்டை மட்டும் எடுத்து வந்தோம். உடனே நாங்கள் ஈரோட்டில் இருந்து மதுரைக்கு சென்றோம். ரேஷன் கார்டில் குறிப்பிட்டுள்ள லெட்சுமியின் பரவை முகவரிக்கு சாமிநாத தெருவிற்கு சென்று இரவு 8 மணிக்கு லெட்சுமியின் வீட்டை கண்டுபிடித்து கதவை தட்டினோம். நாங்கள் கதவை தட்டியபொழுது வீட்டிற்குள் இருந்து லெட்சுமியின் சகோதரி ராக்கு என்பவர் கதவை திறந்து வெளியே வந்தார். அவரிடம் ரேஷன்கார்டை காட்டி விசாரித்தோம். ராக்கு எங்களிடம் உங்களுக்கு எப்படி இந்த ரேஷன்கார்டு வந்தது என்று கேட்டார். எனது மகள் அப்பொழுது அழுதாள் அதற்கு ராக்கு தனது தங்கை லெட்சுமி முதல் கணவரையும் இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு ஈஸ்வரனுடன் ஓடிபோய்விட்டது என்றும் தங்களுக்கும் லெட்சுமிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொல்லி ராக்கு தனது தங்கை லெட்சுமியின் புகைப்படத்தையும் ஈஸ்வரனின் தேனிபக்கம் உள்ள போடி தர்மத்துப்பட்டி முகவரியை எங்களிடம் கொடுத்தார். பிறகு எனது மகள் சுகன்யாவை அழைத்துக்கொண்டு தர்மத்துப்பட்டிக்கு அந்த இடம் ஆபத்தான இடம் என்பதால் என் மகளை என்வீட்டில் விட்டுவிட்டு என் கணவரை அழைத்துக்கொண்டு போடிக்கு சென்றோம். அப்பொழுது போடி தர்மத்துப்பட்டியில் எதிரி ஈஸ்வரன் வீட்டில் 85 வயது மதிக்கதக்க வெள்ளப்பாண்டி என்ற ஒரு முதியவர் வந்தார். அவரிடம் விசாரிக்க அவர் தனது மகன்

ஈஸ்வரனுக்கு இங்கு ஒரு பெண்ணை திருமணம் செய்தும் இரண்டு குழந்தைகள் உண்டு என்றும் தனது மருமகள் வேலைக்கு சென்றுள்ளார் என்றும் சொன்னார். மேற்கொண்டு தன் மகன் ஈஸ்வரனிடம் வெள்ளப்பாண்டி எங்களை வைத்துக்கொண்டு போன் செய்து ஈஸ்வரனிடம் பேசி நாங்கள் வந்த விபரம் சொல்லி ஈஸ்வரரினடம் பிரச்சனை இல்லாமல் குழந்தையை கொண்டுவந்து கொடுத்துவிட சொல்லி சொன்னார். அப்பொழுது எனது பேத்தியின் அழுகை சத்தம் போனில் கேட்டது. ஈஸ்வரனின் தகப்பனார் வெள்ளப்பாண்டி நல்லவர் ஆவார். அவர் என்னிடம் போனைக்கொடுத்து பேத்தியின் அழுகை சத்தத்தை கேட்கவைத்தார். வெள்ளப்பாண்டி எங்களிடம் இன்று இரவு இங்கு தங்குங்கள் என்றும் ஈஸ்வரன் குழந்தையை கொண்டுவந்து தருவதாக சொன்னதாகவும் குழந்தை வந்தவுடன் காலையில் வாங்கிக்கொண்டு செல்லலாம் என்று முதலில் சொன்னார். ஒரு இரண்டு மணி நேரம் கழித்து மீண்டும் வெள்ளப்பாண்டி ஈஸ்வரனுக்கு போன் செய்தபொழுது ஈஸ்வரன் தங்களிடம் குழந்தை கிடையாது என்றும் நாங்கள் பொய்யாக சொல்வதாகவும் வெள்ளப்பாண்டியிடம் பேசிவிட்டான். உடனே வெள்ளப்பாண்டிக்கும் ஈஸ்வரனுக்கும் போனிலேயே சண்டை வந்துவிட்டது. பிறகு வெள்ளப்பாண்டி ஈஸ்வரன் குழந்தைகை கொண்டுவந்து கொடுத்தால் உங்களுக்கு சொல்கிறேன் என்று சொல்லி எங்களை அனுப்பிவைத்தார். நாங்கள் உடனே அன்றே தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சென்று நடந்த விபரத்தை சொன்னோம். தேனி எஸ்பி ஆபிசில் போடி காவல் அதிகாரி ஹேமலதா என்பவர் மூலம் ஈஸ்வரனின் தகப்பனார் வெள்ளப்பாண்டியை விசாரணைக்கு கூட்டி வந்தால் எதிரி ஈஸ்வரன் குழந்தையை கொண்டுவந்து ஒப்படைப்பான் என்று சொல்லி எங்களை போடிக்கு போக சொன்னார்கள். நாங்கள் போடி காவல் நிலையத்திற்கு சென்று அங்கு காவலர் ஹேமலதாவை சந்தித்தோம். ஹேமலதா வெள்ளப்பாண்டி வீட்டிற்கு சென்று வெள்ளப்பாண்டியையும் வெள்ளப்பாண்டியின் மனைவியையும் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்துவிட்டனர். ஹேமலதா வெள்ளப்பாண்டியிடம் விசாரித்தார். வெள்ளப்பாண்டி ஒரு வாரம் கெடு கொடுங்கள் இடையில் என் மகன் போனில் பேசுவான் குழந்தையை கொண்டுவந்து ஒப்படைத்துவிடுகிறேன் என்று போலிசில் சொன்னார். ஒருவாரம் போலிசில் கெடு கொடுத்தார்கள். எங்களின் செல் நம்பரை போலிசில் வாங்கி வெள்ளப்பாண்டிக்கும் கொடுத்தார்கள். எங்களை தூத்துக்குடிக்கு சென்றுவிட்டு ஒரு வாரம் கழித்து வரச்சொன்னார்கள். நாங்கள் ஒருவாரம் கழித்டது நானும் எனது கணவரும் போடி காவல் நிலையம் சென்றோம். அங்கு ஈஸ்வரனின் தகப்பனார் வெள்ளப்பாண்டியும் வந்தார். வெள்ளப்பாண்டி முன்னுக்கு பின் முரணாக பேசினார். அவர் தனது மகன் வரவில்லை என்றும் அவனைக்குறித்து தனக்குத் மேற்கொண்டு எதுவும் தெரியாது என்று சொன்னார். வெள்ளப்பாண்டி எங்களிடம் போன் நம்பர் வாங்கி கொண்டு ஈஸ்வரன் எப்பொழுது வந்தாலும் உடனே போன் அடித்து உங்களை வரசொல்கிறோம் என்று சொல்லி விபரம் சொன்னார். பிறகு நாங்கள் தூத்துக்குடி வந்துவிட்டோம். இடையில் நானும் எனது கணவரும் வெள்ளப்பாண்டிக்கு அடிக்கடி

போன் செய்து எனது பேத்தியைக்குறித்து கேட்டப்பொழுது வெள்ளப்பாண்டி சரிவர பதில் சொல்லவில்லை. எதிரிகள் நாகூரில் எனது பேத்தியை வைத்து பேத்தியைக்காட்டி பிச்சை எடுத்துள்ளனர். அதுபோல வேறு எந்த கோயிலிலாவது எதிரிகள் இந்துக்கள் என்பதால் பிச்சை எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதி நானும் எனது கணவரும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, பழமுதிர்ச்சோலை, கோயம்புத்தூர் பக்கத்தில் உள்ள மருதமலை, மற்றும் ஓசூர், கிருஷ்ணகிரி என முருகனின் அருபடை வீடு என உட்பட எல்லா இடங்களுக்கும் நானும் எனது கணவரும் எனது பேத்தியை தேடி எதிரிகளை தேடி ஒவ்வொரு ஊராக சென்று தேடினோம். நானும் எனது கணவரும் அங்கெல்லாம் பிளாட்பாரத்தில் தங்கி எங்கள் பேத்தியை தேடினோம். கிருஷ்ணகிரியில் இரயில்வே ஸ்டேஷன் அருகில் எனது பேத்தியின் புகைப்படத்தை காப்பியாக எடுத்து அதில் பின் பக்கம் எனது போன் நம்பரை எழுதி பார்க்கும் நபர்களிடம் எல்லாம் அந்த புகைப்பட காப்பியை கொடுத்து எனது பேத்தி காணாமல்போன விபரத்தை சொன்னோம். நாங்கள் பிறகு தூத்துக்குடி வந்துவிட்டோம். தூத்துக்குடியில் நானும் எனது கணவரும் எனது மகளும் இருந்தபொழுது ஒரு நாள் கிருஷ்ணகிரியில் இருந்து போன் ஒன்று வந்தது. அதில் பேசிய ஆண் நபர் என்னிடம் போட்டோவில் கண்ட குழந்தையை ஒரு பெண்ணும் ஒரு ஆணும் கிருஷ்ணகிரி இரயில்வே ஸ்டேஷன் பக்கதில் உள்ள சுரங்கப்பாதை மேம்பாலத்தில் குழந்தையை வைத்துக்கொண்டு பிச்சை எடுப்பதாகவும் உடனே வருமாறு சொன்னார். தூத்துக்குடியில் இருந்து பெங்களூர் செல்லக்கூடிய மைசூர் எக்ஸ்பிரஸ் மாலை 4 மணிக்கு செல்லும் என்பதால் நானும் எனது கணவரும் அந்த மைசூர் எக்ஸ்பிரசில் கிளம்பி ஓசூர் சென்றோம். அடுத்த நாள் விடியற்காலை 4 மணிக்கு ஓசூர் இரயில்வே ஸ்டேஷன் சென்றோம். ஈஸ்வரனின் போட்டோவை போடியில் பார்த்ததால் ஈஸ்வரனின் முகத்தை அந்த சுரங்கபாதை பாலத்தில் ஓரமாக படுத்துகிடந்தவர்களை பார்த்தேன். அங்கு பாலத்தின் ஓரம் படுத்துகிடந்தவர்களை கிளப்பி எனது பேத்தியின் புகைப்படத்தை காட்டி பார்த்தீர்களா என்று கேட்டோம். ஒருவரும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். நானும் எனது கணவரும் மேற்கொண்டு தூத்துக்குடி வந்துவிட்டோம். பிறகு நான் எனது பேத்தி காணாமல் போனது பொறுத்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு மனுவும், தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஒரு மனுவும், தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் ஒரு புகார் மனுவும் எனது பேத்தியை தேடி கண்டுபிடித்து தரசொல்லி மனுக்கொடுத்தோம். மதுரை உயர் நீதிமன்றத்திலும் நடவடிக்கை எடுக்க மனுக்கொடுத்தோம் அவர்கள் சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவுப்போட்டார்கள். பிறகு நாகப்பட்டினம் சிபிசிஐடி அலுவலகத்தை சார்ந்த ஆய்வாளர் சரவணன் எங்களை போன் மூலம் தொடர்பு கொண்டு குழந்தையை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அது வகைக்கு எங்களை விசாரிக்க வேளாங்கண்ணி வருமாறு சொன்னார். நாங்கள நானும் எனது மகள் சுகன்யாவும் தூத்துக்குடியில் இருந்து கிளம்பி வேளாங்கண்ணி வந்தோம். நாங்கள் சரவணன் சாரை

தொடர்பு கொண்டு எங்கு வரவேண்டும் என்று கேட்டோம் . அவர் குழந்தை கலவு போன இடத்திற்கு வருமாறு சொன்னதால் நானும் எனது மகளும் அங்கு சென்றோம். காலை 9.00 மணிக்கு பாத்ரூம் அருகே சிபிசிஐடி போலிசில் ஆய்வாளர் சரவணன் ஒரு பெண் காவலர் ஒரு ஆண் காவலர் ஆகியோர் அங்கு வந்து என்னையும் எனது மகளிடமும் அறிமுகப்படுத்திக்கொண்டு எங்களை விசாரித்தனர். நாங்கள் தூத்துக்குடியிலிருந்து வரும்போது ஈஸ்வரன் மற்றும் லெட்சுமியின் புகைப்படம் மற்றும் லெட்சுமியின் ரேசன் கார்டு அசல் ஆகியவற்றையும் எனது பேத்தியின் போட்டோவையும் கொண்டு வந்து ஆய்வாளர் சரவணனிடம் கொடுத்தோம். ஆய்வாளரோடு நாங்கள் நாகப்பட்டினம் சிபிசிஐடி ஆபீஸ் வந்து நடந்த விபரத்தை எனது பேத்தியின் புகைப்படத்தைக் கொடுத்து ஆய்வாளரிடம் விபரம் சொன்னோம். சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து என்னிடமும் எனது மகளிடமும் விசாரித்து சிபிசிஐடி ஆய்வாளர் என்னிடமும் எனது மகள் சுகன்யாவிடமும் தனித்தனியாக வாக்குமூலம் வாங்கிக்கொண்டார். ஆய்வாளர் சரவணனிடம் உங்களால் தான் எனது பேத்தியை கண்டுபிடித்து தர முடியும் என்று சொல்லிவிட்டு தூத்துக்குடிக்கு வந்துவிட்டோம். நாங்கள் சிபிசிஐடி வந்து சென்ற சுமார் 6 மாதத்திற்குள் ஒரு நாள் 22.03.2017 அன்று எங்கள் வீட்டிற்கு ஆய்வாளர் சரவணன் போன் செய்தார். இதற்கிடையில் அடிக்கடி நான் சரவணன் சாருக்கு போன் செய்து எனது பேத்தி கிடைத்துவிட்டாளா என்று கேட்டேன். அவர் தேடிக்கொண்டிருப்பதாக அடிக்கடி சொல்வார். பிறகு 22.03.2017 அன்று இரவு 8.00 மணிக்கு எனது வீட்டிற்கு சரவணன் சார் செய்த போது நான் பேசினேன். அப்போது சரவணன் சார் குழந்தை கிடைத்துவிட்டது என்றும் கோர்ட்டுக்கு வந்து நாகப்பட்டினம் கோர்ட்டுக்கு வந்து குழந்தையை பெற்று செல்லுமாறு என்னையும் சுகன்யாவையும் வர சொல்லி போன் மூலம் சொன்னார். நானும் எனது மகளும் இந்நீதிமன்றத்திற்கு அடுத்த நாள் காலையில் வந்து விட்டோம். நாங்கள் காலை 10.00 மணிக்கு நீதிமன்ற வாசலில் காத்திருந்தோம். சிபிசிஐடி போலிசார் எங்களை முன்பு விசாரித்தபோது எனது பேத்திக்கு 3 அடையாளங்கள் இருந்ததை சொல்லியிருந்தேன். தலையில் எனது பேத்திக்கு இரட்டை சுழி உண்டு, எனது பேத்தி சிரிக்கும்போது இரண்டு கன்னங்களிலும் குழி விழும், எனது பேத்தி அவரது ஜெரோம் போல் சப்பை மூக்காகும். இந்த அடையாளத்தை நான் சொல்லியிருந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் மாலை 4 மணிக்கு இந்நீதிமன்ற வாசலில் போலிஸ் ஜீப்பில் வந்து இறங்கினார்கள். அப்போது லெட்சுமி கையில் வைத்திருந்த குழந்தையை நான் அப்பி அந்த குழந்தையிடம் அந்த அடையாளங்கள் 3ம் இருந்ததா என்று சரிபார்த்தேன். அப்போது சிபிசிஐடி போலிசார் என்னைப்பார்த்து உன் பேத்தி தானே எதிரிகள் கொண்டு சென்றதை கொண்டுவந்துள்ளார்கள் என்று சொன்னார். அப்போது நான் குழந்தைக்கு அடையாளம் பார்ப்பதை சொன்னேன். எங்கள் குழந்தையின் 3 அடையாளங்களும் சரியாக இருந்தது. அதுதான் எனது பேத்தியாகும். உடனே சரவணன் சாருக்கு ரொம்ப நன்றி சொன்னேன். போலிசாரிடமும், நீதிமன்றத்திலும் நானும் எனது

மகளும் எனது பேத்தியை குறித்து அடையாளம் காட்டினோம். நீதிமன்றத்தில் எங்களிடம் எனது பேத்தியை ஒப்படைத்தார்கள். பிறகு இரண்டு மாதம் கழித்து சரவணன் சார் போன் செய்து எனது பேத்திக்கும் எனது மகளுக்கும் நீதிமன்றம் மூலமாக டிஎன்ஏ டெஸ்ட் எடுக்கவேண்டும் என்று இருவரையும் கூட்டி வருமாறு என்னிடம் போனில் தகவல் தெரிவித்தார். உடனே நானும் எனது மகளும் பேத்தியைக்கூட்டிக்கொண்டு இந்நீதிமன்றத்திற்கு வந்தோம். எனது மகள் சுகன்யாவையும், எனது பேத்தியையும் நீதிமன்றம் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று டிஎன்ஏ டெஸ்ட் எடுத்தார்கள். பிறகு தூத்துக்குடிக்கு பேத்தியோடு சென்றுவிட்டோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுதான் என்னால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் வசம் கொடுத்த புகார் மனு ஆகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த புகார் மனு அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக சிபிசிஐடி போலிசார் விசாரிக்க விபரம் சொன்னேன். எனது பேத்தியை நீதிமன்றத்திலிருந்து எடுக்கப்பட்ட போட்டோ என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவாகும். அதில் உள்ளது என்னுடைய பேத்தியாகும். எனது பேத்தியின் புகைப்படம் அதசாஆ.2 ஆகும். இதுசம்பந்தமாக நடந்த விபரங்களை சிபிசிஐடி போலிசார் விபரம் சொன்னேன்.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

எனக்கு தூத்துக்குடி சொந்த ஊராகும். நாங்கள் கிருஸ்தவர்கள் ஆவோம். எனது மகள் சுகன்யாவை ஜெரோம் என்பருக்கு 2015ம் வருடம் திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகளுக்கு 2015ல் திருமணம் செய்து கொடுத்த விபரத்தை எனது புகாரிலும் சொல்லியுள்ளேன். எனது மருமகன் ஜெரோமுக்கு பழைய காயல் என்ற ஊர் சொந்த ஊராகும். எனது மகள் சுகன்யாவிற்கும் எனது மருமகன் ஜெரோமுக்கும் பெரியோர்களால் பார்த்து வைத்த திருமணம் ஆகும். அது காதல் திருமணம் என்றால் சரியல்ல. எனது மகளை திருமணம் செய்து கொடுத்தபிறகு எனது மருமகன் ஜெரோம் வெளிநாடு சென்று விட்டதால் பிறகு என் மகள் எங்கள் வீட்டில் இருந்தார். எனது மகளை எனது மருமகன் ஜெரோம் தான் வெளிநாடு செல்ல இருந்ததால் எங்கள் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டு சென்றார். எங்கள் வீட்டில் எனது மகள் இருந்தபோது எனது மகளுக்கு எனது பேத்தி பிறந்தாள். ஜெரோமுக்கும் சுகன்யாவிற்கும் எந்த சண்டை சச்சரவும் கிடையாது. நான் வீட்டு வேலைக்கு சென்ற சமயத்தில் எனது கணவரோடு கோபித்துக் கொண்டு எனது மகள் சுகன்யா தனது குழந்தையைக் தூக்கிக்கொண்டு வேளாங்கண்ணிக்கு போனது எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது. நான் வீட்டு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது மகள் மற்றும் பேத்தியை காணாதது

பொறுத்து எனது கணவரிடம் கேட்டேன். அவர் தன்னோடு வாக்குவாதம் செய்துகொண்டு சுகன்யா குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே சென்றதாக சொன்னார். வேளாங்கண்ணிக்கு எனது மகள் அடிக்கடி செல்வார் என்றால் சரியல்ல. நாங்கள் குடும்பமாகத்தான் அடிக்கடி வேளாங்கண்ணி வருவோம். முன்பு குழந்தையை தூக்கி செல்லாமல் சுகன்யா வேளாங்கண்ணிக்கு வந்து வேலைப் பார்த்துள்ளார். வேளாங்கண்ணியில் வேலை பார்த்த சுகன்யா 10 நாளைக்கு ஒரு முறை தூத்துக்குடிக்கு வந்து தனது குழந்தையை பார்த்து செல்வார். சுகன்யாவைப் போல் சிலர் பேன்சி ஸ்டோரில் வேலைப் பார்த்தவர்கள் நான்கு பேர் சுகன்யாவையும் சேர்த்து ஒரு சுனாமி வீட்டை எடுத்து தங்கி இருந்து பேன்ஸ ி ஸ்டோரில் வேலைப் பார்த்துள்ளனர். அந்த சுனாமி வீட்டிற்கு அருகே பேன்ஸி ஸ்டோர் உரிமையாளர் வீடு இருந்துள்ளது. அந்த பகுதியில் விசாரித்தால் சுகன்யாவைப்பற்றி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியும். சுகன்யாவின் கணவர் ஜெரோம் வெளிநாட்டில் இருந்ததால் அவர் வந்தபிறகு பேத்திக்கு பேர் வைக்கும் விழாவை நடத்தலாம் என்பதால் பேத்திக்கு பேர் வைக்கவில்லை. தடுப்பூசி அட்டையிலும் எனது பேத்தி பெயர் பெண் குழந்தை என்று தான் குறிப்பிடப்பட்டது. தடுப்பூசி போட்டபோது தான் போட்டோ தடுப்பூசி அட்டைக்கு கேட்டதால் எனது பேத்திக்கு போட்டோ எடுத்தோம். எனது பேத்தி 7 மாத குழந்தையாக இருந்தபோது போட்டோ எடுத்தோம். குழந்தையை எதிரிகள் கொண்டு சென்றவுடன் எனது மகள் எனது பேத்தியைத் தேடி அலைந்து வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். பின்பு தான் தூத்துக்குடி வந்துள்ளார். குழந்தை காணாமல் போனது எனது மகள் சுகன்யா சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். குழந்தை காணாமல் போனது குறித்து நான் தூத்துக்குடியில் இருந்ததால் அது நேரில் தெரியாது என்றால் சரிதான். நாகூரில் கண்ட ஒரு பெண்ணையும் அவருடைய 10 வயது குழந்தையையும் கூட்டிக்கொண்டு நானும் எனது மகளும் வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்று போலிசாரிடம் விபரம் சொன்னோம். ஆனால் நான் தனியாக வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் வேறு புகார் எதுவும் கொடுக்கவில்லை. வேளாங்கண்ணி வைத்து அந்த பெண்ணையையும் குழந்தையையும் போலிசார் 10 நாட்கள் வந்து கையெழுத்து போடுமாறு சொன்ன பிறகு அந்த இரண்டு பேரின் பெயர் விபரம் விலாசத்தையும் அந்த பதட்டத்தில் நான் கேட்க வில்லை. ஆனால் போலிசார் அந்த இரண்டு பேரையும் விசாரித்தார்கள். நானும் எனது மகளும் நாகூருக்கு சென்றோம். போகும்போது எனது பேத்தியின் போட்டோவை எடுத்துச்சென்றோம். அந்த பெண்ணையும் அந்த 10 வயது குழந்தையையும் போலிசார் சரியாக

விசாரிக்காமல் 10 நாள் கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டார்கள். வழக்கு சம்பவம் ஒன்று நடக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் முன்வைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த 10 வயது பெண் குழந்தையையும் அவரது தயாரையும் நான் நாகூர் சென்றிருந்தால் கட்டாயம் பெயர் விபரம் விசாரித்திருப்பேன் என்றும் நானும் எனது மகளும் நாகூர் செல்லாததால் தான் இந்த விபரங்கள் குறித்து அந்த பெண்ணிடமும், குழந்தையிடமும் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுகன்யாவுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே நல்ல பழக்கவழக்கம் உண்டு என்றும் அந்த வகையில் தான் பெற்ற குழந்தையை எதிரிகளிடம் வளர்க்க சொல்லி சுகன்யா விரும்பி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. குழந்தையைப் பொறுத்து வெளிநாடு சென்ற எனது மருமகன் குழந்தையை வந்து கேட்பார் என்பதால் இந்த வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகள் முழுமனதாக குழந்தையை விரும்பி எதிரிகளிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.